**SUBORDINATE COURT, PADMANABHAPURAM**

**CASE NO.SC. 63/2021**

**Deposition of P.W.**

Name : டாக்டர். திரு. ஷாஜி ஜெய்சீஸ்

S/o, D/o, W/o : சகரியா

Village :

Taluk :

Calling :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

Dated:**01.04.2026**

Accused present.

<u>முதல் விசாரணை</u>–

நான் தற்போது தக்கலை அரசு மருத்துவமனையில் குடிமை மருத்துவராக பணியாற்றி வருகிறேன். 09.09.2018ம் தேதி நான் பணியில் இருந்த போது இரவு 09.15 மணிக்கு சுவாமியார்மடம், நெடியான்கோடு செய்னுலாபுதீன் மகன் அன்சார் (வயது 28) மற்றும் நெடியான்கோடு மேலவிளை கங்காதரன் நாயர் மகன் பார்த்தீபன் (வயது 25) ஆகியவர்கள் 3 பேர் தங்களை சுவாமியார்மடத்தில் வைத்து தாக்கியதில் காயமடைந்ததாக சிகிச்சைக்கு வந்தார்கள். நான் மேற்படி நபர்களை பரிசோதித்து முதலுதவி சிகிச்சை அயித்து மேல்சிகிச்சைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன்.

காயம்பட்ட அன்சார் என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு

1) 3 X 1 X 3 CM அளவிலான ஊடுருவிய காயம் வயிற்றின் இடது

பகுதியில் காணப்பட்டது.

2) 2 X 1 X 2 CM அளவிலான ஊடுருவிய காயம் இடது முன் கையில் இருந்தது.

மேற்படி காயங்கள் கொடுங்காயம் என்று ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்ட சிகிச்சை ஆவணங்களிலிருந்து கருத்து வழங்கினேன். காயச்சான்று அ.சா.ஆ.3 ஆகும்.

கார்த்தீபன் என்பவருக்கு ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு

1) இடது அரைபகுதியில் 4 X 1 X 3 CM அளவிலான குத்துக்காயம் காணப்பட்டது,

2) வலது இடுப்பில் 4 X 1 X 3 CM, 2 X 1 X 3 CM, 4 X 1 X 3CM அளவிலான மூன்று குத்துக்காயங்கள் காணப்பட்டன.

மேற்படி காயங்கள் கொடுங்காயங்கள் என்று ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையிலிருந்து வழங்கப்பட்ட சிகிச்சை ஆவணங்களிலிருந்து கருத்து வழங்கினேன். காயச்சான்று அ.சா.ஆ.4 ஆகும். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காயம்பட்டவர்கள் என்னிடம் சுவாமியார்மடம் சந்திப்பில் வைத்து சம்பவம் நடந்ததாக கூறினார்கள் என்றால் சுவாமியார்மடத்தில் வைத்து நடந்ததாக கூறினார்கள். காயம்பட்ட அன்சார் சிகிச்சைக்கு வரும் போது குடிபோதையில் இருந்தார் என்றால் சரிதான். காயம்பட்டவர்கள் தனியார் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சைக்கு வந்தார்கள். வட்ட வடிவமான பாட்டிலால் குத்தினால் வட்ட வடிவமான காயங்கள் ஏற்படும் என்றால் பாட்டிலை உடைக்காமல் குத்தினால் வட்ட வடிவிலான காயங்கள்

ஏற்படும். வட்ட வடிவிலான ஒரு அடி நீளமுள்ள பாட்டிலின் நுனி பகுதியை உடைத்து குத்தினால் ஒழுங்கற்ற வட்ட வடிவிலான காயங்கள் ஏற்படும் என்றால் சரியல்ல. அவ்வாறு ஒழுங்கற்ற வட்ட வடிவிலான காயங்கள் ஏற்படாது என்று பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. உடைந்த பாட்டிலால் குத்தும் போது காயத்தில் உடைந்த கண்ணாடி துண்டுகள் காணப்பட வாய்ப்பு உண்டு. இருவரின் காயங்களிலும் கண்ணாடி துண்டுகள் இருந்ததாக நான் குறிப்பிடவில்லை. ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவமனையில் வழங்கிய சிகிச்சை சான்றில் கண்ணாடி துண்டுகள் இருந்ததாக கொடுக்கவில்லை. காயங்கள் வட்ட வடிவிலான காயங்கள் என்றோ, ஒழுங்கற்ற காயங்கள் என்றோ நான் குறிப்பிடவில்லை, நீளமான மற்றும் ஆழமான காயங்கள் என்று குறிப்பிட்டுள்ளேன். காயம்பட்ட நபர்களுக்கு ஏற்பட்ட காயங்கள் கொடுங்காயங்கள் என்ற வரையறைக்குள் வராது என்றால் சரியல்ல. மார்பில் இருபக்கங்களிலும் தலா 12 விலா எலும்புகள் உண்டு. 11 எலும்புகள் மற்றொரு எலும்புடன் தொடர்புடன் இருக்கும் 12வது எலும்பு மட்டும் ஸ்டெர்ணத்தோடு தொடாமல் இருக்கும் என்றால் சரிதான். அதனை புளோட்டீன் எலும்பு என்றும் சொல்வார்கள். அந்த எலும்பு மிருதுவான எலும்பு என்றால் சரியல்ல. விபத்திலோ, இருசக்கர வாகனத்திலிருந்து விழுந்தாலோ 12வது எலும்பு முறிவதற்கு அபூர்வமாக வாய்ப்புள்ளது. இருமல் ஏற்பட்டால் முறிவு ஏற்படாது. குறுக்காக மேல்நோக்கி குத்தும் போது அந்த எலும்பை உடைத்து கொண்டு நுரையீரலில் குத்துப்பட வாய்ப்புள்ளது. இருசக்கர வாகனத்தில் குடிபோதையில் சென்று பாட்டில் குவியல் மீது விழும் போது நான் சொன்ன காயங்கள் ஏற்பட வாய்ப்புகள் உள்ளது.